# வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்

தரம் 6

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019**

**விஞ்ஞானம்**

சுட்டெண் -

**நேரம் - 2 மணித்தியாலம்**

**பகுதி - I**

**எல்லா வினாக்களிற்கும் விடை தருக.**

**1. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. தொலைவில் உள்ள பொருட்களை அருகே பார்ப்பதற்கு உதவும் உபகரணம்
   1. நுணுக்குக்காட்டி 2. அரிய இருவிழியன் 3. வெப்பமானி 4. திசைகாட்டி

2. பின்வருவனவற்றுள் சடப்பொருள் எது?
   1. வெப்பம் 2. ஒளி 3. ஒலி 4. காந்தம்

3. இலங்கையில் மின் உற்பத்தி செய்யப்படும் முறை **அல்லாதது**
   1. நீர் மின்சாரம் 2. அனல் மின்சாரம் 3. காற்றுவலு மின்சாரம் 4. அணு மின்சாரம்

4. சூழல் வெப்பநிலையுடன் தனது உடல் வெப்பநிலையை மாற்றிக் கொள்ளும் விலங்கு எது
   1. மனிதன் 2. ஆடு 3. பருந்து 4. தவளை

5. சீனி சேர்க்கப்பட்ட பசுப்பால், குளிர் களியாக மாறும் போது (Ice Cream) ஏற்படும் நிலைமாற்றம்
   1. உருகுதல் 2. உறைதல் 3. ஒடுங்குதல் 4. பதங்கமாதல்

6. காந்தமொன்றின் காந்த வலிமை அற்றுப்போகும் சந்தர்ப்பம் **அல்லாதது**
   1. வெப்பப்படுத்துதல் 2. தரையில் விழுத்துதல்
   3. சுத்தியலால் அடித்தல் 4. நீரில் கழுவுதல்

7. படிவு வீழ்ச்சிக்கு உதாரணம் **அல்லாதது**
   1. பனி 2. பனிமழை 3. ஆலங்கட்டி மழை 4. அருவி

8. இறப்பர் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் **தவறானது**
   1. திட்டமான வடிவமுண்டு 2. திட்டமான கனவளவுண்டு
   3. மீள் தன்மையுடையது 4. நொருங்கக்கூடியது

9. தற்காலத்தில் சக்திச் சிக்கனத்துடன் ஒளியைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரண வகை
   1. இழை மின்குமிழ் 2. புளோரொளிர்வு மின்குமிழ்
   3. சோடியம் விளக்கு 4. LED

10. சூழல் மாசடைவதைக் குறைப்பதற்கு
   1. அதிக வாகனங்களைச் செலுத்துதல் வேண்டும்.
   2. சூரிய அடுப்பை பயன்படுத்தல் வேண்டும்.
   3. கிளுவை வேலிகளை அகற்றி தகர வேலி அமைத்தல் வேண்டும்.
   4. வாகனங்களை கொண்டு சென்று குளக்கரைகளில் வைத்துக் கழுவுதல் வேண்டும்.

**(10X2 = 20 புள்ளிகள்)**



kalvi.lk

**2. சரியான தொடர்புடைய இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

| | | |
|---|---|---|
| 11. நீர்மின்வலு நிலையம் | உலர் மின்கலம் | (    ) |
| 12. காற்றுமின் வலுநிலையம் | விக்ரோரியா | (    ) |
| 13. அனல் மின் உற்பத்தி நிலையம் | கார் பற்றறி | (    ) |
| 14. முதன்மைக் கலம் | நுரைச்சோலை | (    ) |
| 15. துணைக்கலம் | புலோப்பளை | (    ) |

**(5x2 = 10 புள்ளிகள்)**

**3. அடைப்பிற்குள் தரப்பட்ட சொற்களில் மிகப்பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.**

16. மின் சுற்றுக்களில் தடையை அளக்கும் அலகு ................................................ (ஓம், வோல்ற்று) ஆகும்.

17. எண்ணெய்க் கடதாசி ஒளியை ................................................ (ஊடுபுகவிடும், கசியவிடும்) தன்மை கொண்டது.

18. காந்தமொன்றில் காந்த இயல்பு ................................................ (முனைவுப், நடுப்) பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படும்.

19. கம்பிச் சுருளினுள் காந்தத்தை அசைப்பதால் மின் உருவாகுமென முதன் முதலில் ........................... (நியூட்டன், மைக்கல் பரடே) என்ற விஞ்ஞானி எடுத்துரைத்தார்.

20. LDR சுற்றில் ஒளி படும் போது அதனது தடைப்பெறுமானம் ................................................ (கூடும், குறைவடையும்)


**(5x2 = 10 புள்ளிகள்)**

**பகுதி - II**

**எல்லா வினாக்களிற்கும் விடை தருக.**

**அமைப்புக்கட்டுரை வினாக்கள்**

**01. படத்தில் அங்கிகளிடையே நிலவும் உணவுத் தொடர்பு காண்பிக்கப்படுகிறது.**



1. இவ் உணவுத் தொடர்பு எச் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும்?
................................................................................(1 புள்ளி)

2. தாவரங்கள் தமக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
................................................................................(1 புள்ளி)

3. இவ் உணவுத் தொடர்பில் எத்தனை இணைப்புக்கள் காணப்படுகின்றன?
................................................................................(2 புள்ளி)

4. இங்கு தாவர உண்ணி எது?
................................................................................(1 புள்ளி)

5. பண்டா எவ்வகை உணவுகளை உண்கின்றது?
................................................................................(1 புள்ளி)

6. பண்டா இனம் உலகில் அழிவடைந்து வருகின்றமைக்கான காரணம் யாது?
................................................................................(2 புள்ளி)

7. மேற்படி உணவுத் தொடர்பில் பாம்பு ஒருவகை நோயால் அழிவடையின் அவதானிக்கத்தக்க மாற்றங்கள் யாது?
................................................................................(2 புள்ளி)

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

**02.** குறித்த ஒரு பிரதேசத்தில் காலம் பிந்திய மழை சில தினங்களாகப் பெய்து வருகின்றது.


| மாதங்கள் | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மழைவீழ்ச்சி mm | 80 | 65 | 5 | 50 | 40 | 40 | 15 | 10 | 40 | 65 | 70 | 100 |

1. மழைவீழ்ச்சியை அளவிடப் பயன்படும் அலகு யாது?
....................................................................................................(2 புள்ளி)
2. மழைவீழ்ச்சி கூடிய மாதம் எது?
....................................................................................................(2 புள்ளி)
3. மழைவீழ்ச்சி குறைந்த மாதம் எது?
....................................................................................................(2 புள்ளி)
4. மின்வெட்டு ஏற்படக்கூடிய மாதம் எது?
....................................................................................................(2 புள்ளி)
5. மழைவீழ்ச்சியை அளவிடுவதற்குப் பயன்படும் உபகரணம் எது?
....................................................................................................(2 புள்ளி)
6. இப்பிரதேசப் பாடசாலையின் அதிபர், இல்ல விளையாட்டுப் போட்டியை எம் மாதத்தில் திட்டமிடுவது சிறந்தது?
....................................................................................................(2 புள்ளி)

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

**கட்டுரை வினாக்கள்**

**03.** மாணவர், குழுக்கள், வெற்று யானை மார்க் சோடாப் போத்தல் இரண்டின் வாய்ப்பகுதியை பலூனினால் மூடி அதில் ஒன்றை குளிர் நீர் கொண்ட முகவையினுள்ளும் மற்றையதை கொதிநீர் கொண்ட முகவையினுள்ளும் வைத்த போது ஏற்பட்ட அவதானங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.




அமைப்பு 1 அமைப்பு 11

1. எமது பிரதான வெப்ப முதல் எது? (1 புள்ளி)
2. இங்கு போத்தல்களினுள் யாது உள்ளது? (1 புள்ளி)
3. இங்கு எவ்வமைப்பினுள் குளிர்நீர் உள்ளது? (1 புள்ளி)
4. அமைப்பு I இனுள் உள்ள பலூன் விரிவடையக் காரணம் யாது? (2 புள்ளி)
5. பலூனை மேலும் விரிவடையச் செய்ய யாது செய்யலாம்? (2 புள்ளி)
6. சாதாரண வெப்பமானிகளினுள் காணப்படும் திரவம் யாது? (1 புள்ளி)
7. எளிய மாதிரி வெப்பமானி ஒன்றை ஆய்வுகூடத்தில் உருவாக்குவதற்குத் தேவையான உபகரணங்கள் 3 தருக. (2 புள்ளி)

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

**04.** வானிலை ஆராய்ச்சி நிலையமொன்றிற்கு சென்ற மாணவர் குழுவொன்று அங்கு வானிலைத் தகவல்களைப் பெறுவதற்காக வைக்கப்பட்டிருந்த உபகரணங்களைப் பார்வையிட்டனர்.





1. வானிலை என்றால் என்ன? (2 புள்ளி)
2. வானிலைத் தகவல்களை வெளியிடுவதற்காக பெறப்படும் அளவிடுகள் 3 தருக. (2 புள்ளி)
3. இலங்கையில் வானிலைத் தகவல்களை வெளியிடும் நிறுவனம் எது? (1 புள்ளி)
4. அருகே படத்தில் காட்டப்பட்ட உபகரணத்தின் பெயர் யாது? (1 புள்ளி)
5. இப்பிரதேசத்தில் எத்திசையை நோக்கி காற்று வீசுகிறது? (2 புள்ளி)
6. இவ் உபகரணத்தின் எளிய மாதிரி அமைப்பு ஒன்றை ஆய்வுகூடத்தில் உருவாக்குவதற்குத் தேவையான உபகரணங்கள் 3 தருக. (2 புள்ளி)

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**



kalvi.lk

**05.** மாணவர்கள் கண்காட்சி ஒன்றில் பின்வரும் இசைக் கருவிகளைக் காட்சிப்படுத்தியிருந்தனர்.



1. ஒலி முதல்களில் இருந்து ஒலி எவ்வாறு பிறப்பிக்கப்படுகின்றது? *(1 புள்ளி)*
2. பின்வரும் இசைக்கருவிகளில் அதிரும் பகுதிகளைத் தருக. *(3 புள்ளி)*
   அ. வயலின் ஆ. மிருதங்கம் இ. நாதஸ்வரம்
3. படத்தில் உள்ளவற்றில் ஒரே விதத்தில் ஒலியை பிறப்பிக்கும் இசைக்கருவிகள் எவை? *(1 புள்ளி)*
4. மென்சவ்வு அதிர்வதன் மூலம் ஒலியை உருவாக்குகின்ற மேலே காட்டப்பட்ட உபகரணம் தவிர்ந்த வேறொரு உபகரணத்தைப் பெயரிடுக. *(1 புள்ளி)*
5. சந்தைகளில் வியாபாரிகள், வாடிக்கையாளர்களால் பிறப்பிக்கப்படும் ஒலி எவ்வாறு அழைக்கப்படும்?
6. அதிக ஒலி பிறப்பிக்கப்படும் இடங்களில் வேலை செய்வோர் பாதுகாப்பிற்காக அணியும் சாதனம் எது? *(1 புள்ளி)*
6. அதிக ஒலியெழுப்புதல் மற்றையவர்களிற்கும் சூழலிற்கும் தீங்கானது என ஆசிரியர் கூறினார். அவ்வாறான காரணங்கள் 2 தருக. *(2 புள்ளி)*

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

**06.** ஒளியை ஊடுபுகவிடும் தன்மையைப் பரிசோதித்த மாணவர் குழுக்கள் தாம் பரிசோதித்த பொருள்களை மூன்று வகையாகப் பிரித்தனர்.

கண்ணாடி, எண்ணெய் பூசப்பட்ட கடதாசி, ரிசுத்தாள், கலங்கிய நீர், கரும்பலகை, உலோகத் தகடு

1. மேலே தரப்பட்ட பொருட்களை கீழே கண்டவாறு வகைப்படுத்துக.
   ஒளியை ஊடுபுகவிடும் பொருட்கள் :-
   ஒளியை கசியவிடும் பொருட்கள் :-
   ஒளியை ஊடுபுகவிடாத பொருட்கள் :- *(3 புள்ளி)*
2. சுயமாக ஒளியை வெளிவிடும் உயிரினம் எது? *(1 புள்ளி)*
3. ஒளியின் பயன்பாடுகள் 3 தருக. *(3 புள்ளி)*
4. மருத்துவத் துறையில் உடலக அங்கங்களை ஒளியூட்டுவதற்குப் பயன்படும் கருவிகள் பெயர் யாது? *(1 புள்ளி)*
5. விஞ்ஞானத் துறையில் மின்குமிழ் கண்டறியப்பட்டது ஒரு வளர்ச்சிப்படியாகும். மின்குமிழைக் கண்டறிந்த விஞ்ஞானி யார்? *(1 புள்ளி)*
6. முதன் முதலில் அமைக்கப்பட்ட மின்குமிழின் இழை எப்பதார்த்தத்தாலானது? *(1 புள்ளி)*

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457